IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

OS NO.111-2014

**PW1 :** ராமச்சந்திரன், S/o. குள்ளப்பா, (Age – 72)

**Date :** 16.03.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –**

வா.சா.ஆ.10 ஆவணம் யாரிடம் இருந்தது என்றால் என்னிடம் தான் இருந்தது. இந்த வழக்கை தாக்கல் செய்த போது வா.சா.ஆ. 10 ஆவணத்தை பிராதுடன் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தற்போது தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் வேறு சொத்துக்களும் இருந்ததால் அதனை பிராதுடன் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.10 ஆவணத்தை எழுதிய போது நான் உடன் இல்லை என்றும் அதனால் அந்த ஆவணத்தை யார் எழுதினார்கள் என்று தெரியாது என்றும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் முதல் பக்கத்தில் 2ம் பத்தியில் தட்டச்சு செய்யப்பட்ட பகுதிக்கிடைய கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கையால் எழுதப்பட்ட பகுதியில் மேளொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.10 ஆவணத்தில் 3ம் பக்கத்தில் தட்டச்சு செய்யப்பட்ட 3வரிகள் அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு 3ம் பக்கத்தில் அடிக்கப்பட்ட பகுதிக்கு பிறகு சர்வே எண் 54 என கைகளால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவண எழுத்தருக்கு தமிழ் தெரியும் அதில் தவறாக எழுதப்பட்டதால் திருத்தப்பட்டுள்ளது. சர்வே எண் 54 க்கும் எங்கள் குடும்பத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் அதனால் தான் வா.சா.ஆ.10 ஆவணத்தில் முதலில் வேறு ஒரு சர்வே

எண்ணை குறிப்பிட்டு விட்டு பிறகு 54என திருத்தம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் எனது தந்தையின் பிதுராஜீத சொத்து என்றால் சரிதான். நான் தற்போது ஒசூரில் குடியிருந்து வரும் வீடு என் தகப்பனாரின் சுயாஜீத சொத்து என்றால் சரிதான்.

என் தந்தை வீட்டை கிரயம் வாங்கிய போது அவருக்கு தனிப்பட்ட வருமானம் இருந்தது என்றால் இல்லை அவர் கிராம நிர்வாக உதவியாளராக பணிப்புரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். என் தந்தை காலி மனையாக சொத்தை கிரயம் வாங்கினார் அதில் நான் லோன் போட்டு வீடு கட்டினேன். என் தகப்பானருக்கு ஓய்வூதியம் வந்ததா என்றால் இல்லை. என் தாயார் முதியோர் உதவி தொகை பெற்று வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் என் தந்தையின் பிது ராஜீத சொத்துக்கள் என்பதால் என் தந்தைக்கு உயில் ஆவணம் எழுதி வைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 54 உள்ள சொத்தில் என் தந்தைக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் அந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதறக்காக வா.சா.ஆ.10 உயில் ஆவணத்தை தயாரித்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதை போல் 1958 ம் ஆண்டு எந்த பாகமும் ஏற்படவில்லை என்றாலும் பாக முச்சாலிக்க எழுதப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்காக 1ம் பிரதிவாதியிடம் இருந்து வாடகை வாங்கி உள்ளோமா என்றால் இல்லை. உண்மையிலேயே வழக்கு சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் 35 ஆண்டுகளாக 1ம் பிரதிவாதியை எந்த வித பிரதிபலனும் இல்லாமல் வழக்கு சொத்தை அனுபவிக்கவிட்டு இருக்க மாட்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னுடைய

பெரியப்பா மகன் என்பதால் அவரை அனுபவிக்கவிட்டோம். வழக்கு சொத்து உள்ள கிராமத்தில் எனக்கு வேறு ஒரு வீடு இருந்து இருந்தால் அரசாங்கத்தால் என் பெயருக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கி இருக்க மாட்டார்கள் என்றால் வீடு என் அப்பா பெயரில் உள்ளது. அதனால் வழக்கு சொத்திற்கான வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது. 1990 ம் ஆண்டு என் பெயருக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது. என் தந்தை 1997ம் ஆண்டு இறந்துவிட்டார். நாகொண்டப்பள்ளி கிராமத்தில் எங்களுக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரியல்ல. கோபானப்பள்ளி கிராமத்தில் எங்களுடைய பூர்விக சொத்து உள்ளது. 1990 ம் ஆண்டில் ஒசூரில் தனியார் கம்பெனியில் வேலை செய்தேன். எனக்கு வேலை இருந்திருந்தால் இலவச வீட்டு மனைபட்டா வழங்க மாட்டார்கள் என்றாலும் நான் அரசாங்கத்தை ஏமாற்றி பட்டா வாங்கி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**